# SUNDAY SCHOOL SYLLABUS

TAMIL

STANDARD 7

1997

## பொருளடக்கம்


1. உத்தமனாகிய யோபு (பகுதி I)

2. உத்தமனாகிய யோபு (பகுதி II)

3. கீழ்ப்படியாத தேவமனுஷன்

4. எலியா போஷிப்பிக்கப்பட்டது

5. கர்மேல் பர்வதத்தில் எலியா

6. ஆகாப் இராஜாவும் நாபோத்தும்

7. எலியாவின் சால்வை எலிசாவின் மீது விழுந்தது

8. சூனேமியாள்

9. நாகமானின் குஷ்டரோகம் சுகமானது

10. எலிசாவின் அற்புதங்கள்

11. ஸ்தேவான்

12. சுவிசேஷகனாகிய பிலிப்புவின் ஊழியம்

13. சவுலின் குணப்படுதல்

14. பேதுருவால் செய்யப்பட்ட அற்புதங்கள்

15. கொர்நேலியு வீட்டாரின் இரட்சிப்பு

16. பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டது

17. பரி. பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம் (பகுதி I)

18. பரி. பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம் (பகுதி II)

19. பவுலும் சீலாவும் சிறையிலிருந்து விடுதலையாக்கப்பட்டது

20. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்

## பாடம் 1

## உத்தமனாகிய யோபு

(பகுதி I)

**பொருளடக்கம்:**

1. யோபின் நற்பண்புகளும் கர்த்தர் அவனைப் பற்றிக் கொடுத்தச் சாட்சியும் (யோபு 1:1, 8).

2 .அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் இருந்தனர். அவனுக்குத் திரளான ஐசுவரியங்களும் இருந்தது (யோபு 1:2, 3).

3. யோபு தன் பிள்ளைகளைப் பரிசுத்தப்படுத்தியதும் அவர்களுக்காக சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தியதும் (யோபு 1:4, 5).

4. யோபைப் பற்றி கர்த்தருக்கும் சாத்தானுக்கும் இடையே நடந்த சம்பாஷணை (யோபு 1:8-12).

5. ஒரேநாளில் யோபுடைய மிருகஜீவன்களும் வேலையாட்களும் மாண்டதுமன்றி, குமாரர் குமாரத்திகளும் இறந்து போனார்கள் (யோபு 1: 13-19).

6. இதைக் கேள்வியுற்றபோது யோபு செய்தது (யோபு 1:20, 21)

7. மறுபடியும் கர்த்தர் சாத்தானிடம் யோபு தன் உத்தமத்தில் உறுதியாய் நிற்பது பற்றிக் கூறியதும், அவன் அவரோட வாதாடியதும் (யோபு 2:1-5).

-------------

## பாடம் 2

## உத்தமனாகிய யோபு

(பகுதி II)

**பொருளடக்கம்:**

1. கர்த்தர் யோபிற்குச் சோதனைகளை அனுமதித்ததும் சாத்தான் அவனனை வாதித்ததும் (யோபு 2:6-8)

2. அவன் மனைவி அவனிடம் கூறிய வார்த்தைளும் அவனுடைய பதிலும் (யோபு 2:9, 10).

3. யோபு தன் சிநேகிதரால் நிந்திக்கப்பட்டதும் எல்லாராலும் கைவிட்டபபட்டதும் (யோபு 12:4 ; 19:13-19).

4. யோபு தன் மிகுந்த உபத்திரவத்தின் மத்தியில் கூறிய நம்பிக்கையின் வார்த்தைகள் சில: யோபு 13:15 ; 19:25-27 ; 23:10.

5. யோபு தன் உத்தமத்தில் உறுதியாயிருப்பதற்கான தீர்மானம் (யோபு 27:5, 6).

6. யோபின் சிநேகிதரைக் கர்த்தர் கடிந்துகொண்டதும் அவர்கள் செய்ததும் (யோபு 42:7-9).

7. யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றியது (யோபு 42:10).

8. கர்த்தர் யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய் அவனை ஆசீர்வதித்ததும் அவன் முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமை ஆசீர்வதிக்கப்பட்டதும் (யோபு 42:10, 12, 13).

**போதனை:**

யோபு கர்த்தரால் சாட்சி பெற்ற மனுஷனாயிருந்தான். எனினும் அவன் சாத்தானால் சோதிக்கப்பட்டு தனக்குண்டான எல்லாவற்றையும், தன் பிள்ளைகளையும் இழந்து, தன் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் பருக்களால் வாதிக்கப்பட்டான். இருப்பினும் அவன் தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை. அவன் எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்து, தன்னை நிந்தித்த தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தான். அதினிமித்தம் கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றி முன் அவனுக்கிருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் அவனை இரண்டத்தனையாய் ஆசீர்வதித்தார். நாமுங்ககூட நம் சகல சோதனைகள் மத்தியிலும் யோபைப் போல பொறுமையாயிருந்து, நம்பிக்கையின் வார்த்தைகளைக் கூறி, மற்றவர்களுக்காகப் பரிந்து பேசினால் கர்த்தர் நம்மையும் ஆசிர்வதிப்பார்.

**மனப்பாடம்** : யோபு 23:12 ; யாக்கோபு 5:11

--------------

## பாடம் 3

## கீழ்ப்படியாத தேவமனுஷன்

I இராஜா. 13:1-32

**பொருளடக்கம்:**

1. இராஜாவாகிய யெரொபெயாம் தூபங்காட்ட பலி பீடத்தண்டையில் நிற்கையில், யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வந்த தேவனுடைய மனுஷன், பலிபீடத்திற்கு எதிராகக் கூறிய கர்த்தருடைய வார்த்தைகள் (I இராஜா. 13:1, 2).

2. இராஜாவின் கோபம்-அவன் தேவனுடைய மனுஷனைப் பிடிக்கத் தன் கையை நீட்டினான். ஆனால் நீட்டின கையைத் தன்னிடமாக முடக்கக்கூடாதபடிக்கு அது மரத்துப்போயிற்று (I இராஜா. 13:4).

3. தேவனுடைய மனுஷன் கொடுத்திருந்த அடையாளமும் அதன் நிறைவேறுதலும் (I இராஜா. 13:3, 5)

4. இராஜா, தேவனுடைய மனுஷனைத் தனக்காக ஜெபிக்கும்படி வேண்டிக்கொண்டான். தேவனுடைய மனுஷன் அவனுக்காக ஜெபித்தபோது, அவனுடைய கை சுகமாயிற்று (I இராஜா. 13:6).

5. இராஜா தேவனுடைய மனுஷனைத் தன் வீட்டிற்கு அழைத்தான். ஆனால் அவன் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், தான் போன வழியாய்த் திரும்பாமலும் இருக்க வேண்டுமென்று கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டிருப்பதாகக் கூறி, அதற்கு மறுத்துவிட்டான் (I இராஜா. 13:7-10).

6. பெத்தேலிலிருந்த கிழவனான ஒரு தீர்க்கதரிசியின் தந்திரங்கள் தேவனுடைய மனுஷனை அத்தீர்க்கதரிசியின் வீட்டிற்குக் கொண்டுவந்து, தேவன் அவனோடு பேசின வார்த்தைக்கு விரோதமாக அவனைப் புசிக்கவும் குடிக்கவும் செய்தது (I இராஜா. 13:11-19).

7. கிழவனான தீர்க்கதரிசிக்கு உண்டான கர்த்தரின் வார்த்தை ( I இராஜா. 13:20-22).

8. தேவனுடைய மனுஷன் ஒரு சிங்கத்தால் கொல்லப்பட்டான் (I இராஜா. 13:23, 24).

9. கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனின் பிரேதத்தைக் கொண்டுவந்து அதை அடக்கம்பண்ணி, துக்கங்கொண்டாடினான் (I இராஜா. 13:25-30).

10. தேவனுடைய மனுஷனை அடக்கம்பண்ணின பின்பு, கிழவனான தீர்க்கதரிசி தன் குமாரரிடம் கூறியவை (I இராஜா. 13:31, 32).

**போதனை:**

தேவன் நமக்குத் தரும் வெளிப்படுத்தல்களுக்கு விரோதமான ஆலோசனை யார் மூலமாக வந்தாலும் அதற்கு நாம் இணங்காமல், அசையாமல் உறுதியாய் நிற்க வேண்டும். நாம் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தின் இலக்கை அடைந்து கொள்ள முடியாது.

**மனப்பாடம்** : கலாத்தியர் 1:8, 9

-------------

## பாடம் 4

## எலியா போஷிப்பிக்கப்பட்டது

I இராஜா. 17:1-24

**பொருளடக்கம்:**

1. எலியா கீலேயாத்தில் வசித்து வந்த இஸ்ரவேலின் தீர்க்கதரிசி (I இராஜா. 17:1).

2. பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்பதைப் பற்றி, ஆகாப் இராஜாவிற்கு எலியா கொடுத்த எச்சரிக்கை (I இராஜா. 17:1).

3. யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொள்ளும்படி, கர்த்தருடைய வார்த்தை எலியாவிற்கு உண்டாயிற்று. அங்கே அவனைப் போஷிப்பிக்க கர்த்தர் காகங்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். (I இராஜா. 17:2-4).

4. காகங்கள் அனுதினமும் காலையிலும் மாலையிலும் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்து தீர்க்கதரிசியைப் போஷிப்பித்தன; தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான் (I இராஜா. 17:5, 6)

5. சில நாட்களுக்குப் பின்பு, தேசத்தில் மழையில்லாத படியால் ஆறு வற்றிப் போனபோது, சாறிபாத்திலிருந்த ஒரு விதவையின் மூலம் அவன் பராமரிக்கப்படும்படி கர்த்தர் ஏற்பாடு செய்தார். (I இராஜா. 17:7-9)

6. எலியா தனக்குண்டான கர்த்தருடைய வார்த்தையின்படியே சாறிபாத்துக்குப் போனான். அப்பட்டணத்தின் ஒலி முகவாசலில் ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். எலியா அவளிடம் தனக்குக் கொஞ்சம் தண்ணீரும் அப்பமும் கொண்டு வரும்படிக் கேட்டான் (I இராஜா 17:10, 11).

7. விதவையின் பதில் (I இராஜா. 17:12).

8. எலியா விதவைக்குக் கொடுத்த ஆலோசனை (I இராஜா. 17:13, 14).

9. அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள். எலியாவிற்கும் அந்த விதவையின் வீட்டாருக்கும் அநேக நாட்களுக்கு ஆகாரம் உண்டாயிருந்தது (I இராஜா. 17:15, 16).

10. இவைகள் நடந்த பின்பு, அவ்விதவையின் மகன் வியாதியில் விழுந்து மரித்தான் (I இராஜா. 17:17).

11. அவள் எலியாவிடம் பேசிய வார்த்தைகள் (I இராஜா. 17:18),

12. எலியா அவளுடைய மகனை உயிரோடெழுப்பினான் (I இராஜா. 17:19-23).

13. விதவை எலியாவைக் குறித்து செய்த அறிக்கை (I இராஜா. 17:24)

**போதனை :**

(i) பூமிக்குரிய ஏதுக்கள் இல்லாமற் போகும்போது கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களை இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளில் பராமரிக்க வல்லவராயிருக்கிறார்.

(ii) நாம் கர்த்தரை விசுவாசிப்பது மட்டுமல்ல, கர்த்தருடைய பரிசுத்தவான்களின் வார்த்தைகளுக்குச் செவி சாய்த்து அதன்படியே செய்ய வேண்டும். அப்போது நாம் பெரிதான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம்.

**மனப்பாடம்** : மத்தேயு 6:26 ; பிலேமோன் 4-6

---------------

## பாடம் 5

## கர்மேல் பர்வதத்தில் எலியா

I இராஜா. 18:17-46

**பொருளடக்கம்:**

1. ஆகாப் எலியாவைச் சந்தித்து, 'இஸ்ரவேலைக் கலங்கப் பண்ணுகிறவன் நீயல்லவா' என்று கேட்டான் (I இராஜா.18:17).

2. எலியாவின் பதில் (I இராஜா. 18:18).

3. எலியா ஆகாபிடம், இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகளையும், தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகளையும் கர்மேல் பர்வதத்திலே கூட்டிச் சேர்க்கும்படி கூறினான் (I இராஜா. 18:19).

4. ஆகாப் அப்படியே செய்தான் (I இராஜா. 18:20).

5. இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடந்த ஜனங்களிடம் எலியா பேசினான் (I இராஜா. 18:21).

6. எலியாவின் சவால் (I இராஜா. 18:22-25).

7. பாகாலின் தீர்க்கதரிசிகள் ஒரு காளையை ஆயத்தம் பண்ணி வைத்த பின்பு, பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிடார்கள்; இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் தங்களைக் சீறிக் கொள்ளவும் செய்தார்கள். ஆனால் மறு உத்தரவு ஒன்றும் வரவில்லை (I இராஜா. 18:26-29).

8. தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை எலியா செப்பனிட்டு, கர்த்தருடைய நாமத்திற்கென்று பன்னிரண்டு கற்களை எடுத்து, ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதைச் சுற்றிலும் ஒரு வாய்க்காலை உண்டாக்கினான் (I இராஜா. 18:30-32).

9. காளை துண்டிக்கப்பட்டு, பலி செலுத்துவதற்கான எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டு, அதன்மேல் மூன்றுமுறை தண்ணீர் ஊற்றப்பட்டது (I இராஜா. 18:33-35).

10. எலியாவின் ஜெபம் (I இராஜா. 18:36, 37).

11. கர்த்தர் உத்தரவு அருளிய விதம் (I இராஜா. 18:38).

12 .ஜனங்களெல்லாரும் கர்த்தரே தெய்வம் என்று அங்கீகரித்து, அறிக்கையிட்டனர் (I இராஜா 18:39)

13. பாகாலின் தீர்க்கதரிசிகள் அனைவரும் பிடிக்கப்பட்டு வெட்டப்பட்டனர் (I இராஜா. 18:40).

14. எலியாவின் ஜெபமும் மழையும் (I இராஜா. 18:41-46).

**போதனை:**

எலியா ஜீவனுள்ள தேவனை விசுவாசித்து அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தபடியால் அவனுடைய ஜெபத்திற்குப் பதில் கிடைத்தது. அதுபோலவே, நாம் கர்த்தரை விசுவாசித்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டால், நம்முடைய எல்லா ஜெபங்களுக்கும் அவர் பதில் தருவார்.

**மனப்பாடம்** : I யோவான் 5:14, 15

--------------

## பாடம் 6

## ஆகாப் இராஜாவும் நாபோத்தும்

I இராஜா. 21:22:35-38 ;
II இராஜா. 9:30-37

**பொருளடக்கம்:**

1. சமாரியாவின் இராஜாவாகிய ஆகாப் ஒரு பொல்லாத இராஜாவாயிருந்தான் (I இராஜா. 21:1, 25, 26).

2. ஆகாப் நாபோத்தின் திராட்சைத்தோட்டத்தை வாங்க விரும்பினான்; ஆனால் நாபோத் அதைக் கொடுக்க மறுத்துவிட்டான். (I இராஜா. 21:4).

3. ஆகாப் சினமடைந்தான் (I இராஜா. 21:4).

4. ஆகாபுக்கும் அவன் மனைவி யேசபேலுக்கும் இடையே நடந்த சம்பாஷணை (I இராஜா. 21:5-7).

5. யேசபேல் நாபோத்தின் மரணத்திற்குக் காரணமாயிருந்தாள் (I இராஜா. 21:15, 16)

6. ஆகாப் திராட்சத்தோட்டத்தை எடுத்துக் கொண்டான் (I இராஜா. 21:15, 16).

7. எலியாவிற்கு உண்டான கர்த்தருடைய வார்த்தை (I இராஜா. 21:17-19).

8. எலியா, ஆகாபின்மீதும் யேசபேலின்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் கூறினான் (I இராஜா. 21:20-24).

9. ஆகாப் இதைக் கேட்டபோது, தன்னைத்தானே தாழ்த்தினான் (I இராஜா. 21:27).

10. ஆகாப் தன்னைத்தானே தாழ்த்தினபடியால், அவனுடைய நாட்களில் பொல்லாப்பை வரப்பண்ணாமல் அவன் குமாரனுடைய நாட்களில் அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவதாகக் கர்த்தர் சொன்னார். (I இராஜா. 21:28, 29).

11. ஆகாபின்மீதும் யேசபேலின்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்தது (I இராஜா. 22:35-38 ; II இராஜா. 9:30-37).

**போதனை:**

ஆகாப் இராஜாவின் மீதும், அவனது மனைவியாகிய யேசபேலின் மீதும், அவர்களுடைய பொருளாசையினிமித்தம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்தது. நாம் பொருளாசையுள்ளவர் - களாயிராமல், நமக்கிருப்பதில் திருப்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** சங்கீதம் 119:36, 37

-------------

## பாடம் 7

## எலியாவின் சால்வை எலிசாவின் மீது விழுந்தது

I இராஜா. 19:19-21 ; II இராஜா. 2:1-18

**பொருளடக்கம்:**

1. எலியா தன் சால்வையை எலிசாவின் மீது போட்டதன் பின், எலிசா தன் ஏர் மாடுகளை விட்டுவிட்டு, அவனுக்கு ஊழியஞ் செய்ய ஆரம்பித்தான் (I இராஜா. 19:19-21).

2. எலிசா எலியாவை விட்டுப் பிரிய மறுத்து, கில்காலிலிருந்து அவன் பெத்தேலுக்கும் எரிகோவுக்கும் செய்த பிரயாணத்தில் அவனோடு கூடப்போனான் (II இராஜா. 2:1, 2, 4).

3. பெத்தேலிலும் எரிகோவிலுமிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரரின் வினவுதலும் எலிசாவின் பதிலும் (II இராஜா. 2:3, 5).

4. எலியாவும் எலிசாவும் யோர்தானுக்குப் போனார்கள். எலியா தன் சால்வையால் யோர்தானின் தண்ணீரை அடித்து, இருவரும் நதியைக் கடந்தனர் (II இராஜா. 2:6-8).

5. எலிசாவின் வாஞ்சையும், எலியா அவனுக்கு இட்ட நிபந்தனையும் (II இராஜா. 2:9, 10).

6. எலியா பரலோகத்திற்கு ஏறிப்போனதும், எலிசாவின் புலம்பலும் (II இராஜா. 2:11, 12).

7. எலியாவின் மேலிருந்து சால்வை கீழே விழுந்தது. எலிசா அதை எடுத்து அதைக்கொண்டு யோர்தானைப் பரித்தான் (II இராஜா. 2:13, 14).

8. தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவுக்கு முன்பாகத் தரை மட்டும் குனிந்து அவனை வணங்கினர் (II இராஜா. 2:15).

9. அவர்கள் விருதாவாகவே எலியாவைத் தேடினார்கள் (II இராஜா. 2:16-18).

10. மரணத்ததை ருசிபாராமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இரண்டு பேர்களில் எலியா ஒருவன்; மற்றவன் ஏனோக்கு. இருவரும் எழு வருட உபத்திரவ காலத்தின் மத்தியில் பூமிக்குத் திரும்பி வந்து, கர்த்தருக்குச் சாட்சிகளாயிருந்து, இரத்தசாட்கிகளாக மரித்து, மூன்றரை நாளுக்குப் பின்பு உயிர்த்தெழுவார்கள் (வெளி. 11:3, 7, 11, 12).

**போதனை:**

எலியா செய்த ஊழியத்தை எலிசா தொடர்ந்து செய்யும்படி எலியா தன் சால்வையை எலிசாவின் மீது போட்டான். ஆனால், எலிசா எலியாவின் இடத்தை நிரப்புவதில் மட்டும் திருப்தி அடையவில்லை. எனவெ எலியாவிடத்திலிருந்த ஆவியின் வரம் இரட்டிப்பாய்த் தனக்கு வேண்டும் என அவன் கேட்டான். நாமுங்கூட நமக்கு முன் ஜீவித்த தேவனுடைய பிள்ளைகள் பெற்றிருந்ததைக் காட்டிலும் பெரிதான அபிஷேகத்தை வாஞ்சிக்க வேண்டும்.

**மனப்பாடம்:** I யோவான் 2:28 ; I கொரிந்தியர் 1:7, 8

--------------

## பாடம் 8

## சூனேமியாள்

II இராஜா. 4:8-37

**பொருளடக்கம்:**

1. சூனேமில் எலிசா-அங்கிருந்த கனம் பொருந்திய ஸ்திரீ அவனை உபசரித்தது. (II இராஜா.
4:8-10).

2. எலிசா கேயாசியின் மூலம் சூனேமியாளின் தேவையை அறியலானான் (II இராஜா. 4:11-14).

3. எலிசாவின் ஆசீர்வாதங்களும் அவளுடைய அவிசுவாசமும் (II இராஜா. 4:15, 16).

4. அவள் ஒரு குமாரனைப் பெற்றது (II இராஜா. 4:17).

5. அப்பிள்ளையின் மரணம் (II இராஜா. 4:18-20).

6. அவள் அப்பிள்ளையை எலிசாவின் கட்டிலின்மேல் கிடத்திவிட்டு, கர்மேல் பர்வதத்திலிருந்த அவனிடம் விரைந்தாள் (II இராஜா. 4:21-25).

7. எலிசா அவளைத் தூரத்திலே வரக்கண்டு, அவளுடைய வீட்டாருடைய சுக செய்தியை விசாரிக்க கேயாசியை அனுப்பினான் (II இராஜா. 4:25, 26)

8. அவள் எலிசாவின் காலைப் பிடித்துக் கொண்டு, தன் துக்கத்தை வெளிப்படுத்தினாள் (II இராஜா. 4:27, 28).

9. எலிசா தன் தடியை கேயாசியிடம் கொடுத்து, அதைப் பிள்ளையின் முகத்தின்மேல் வைக்கும்படி அவனை அனுப்பினான்; ஆனால் அது எவ்வித அற்புதத்தையும் நடப்பிக்கவில்லை (II இராஜா. 4:29, 31).

10. எலிசா அவ்வீட்டிற்குப் போய், பிள்ளையை உயிரோடெழுப்பினான் (II இராஜா. 4:30, 32-37).

**போதனை :**

நாம் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும்போது தேவனுக்கே ஊழியஞ் செய்கிறோம். அதற்காகக் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். பரிசுத்தவான்கள் நம்முடைய சோதனை நேரங்களில் நமக்காப் பரிந்து பேசி நமக்கு உதவி செய்கிறார்கள்.

**மனப்பாடம்:** எபிரெயர் 6:10

--------------

## பாடம் 9
## நாகமானின் குஷ்டரோகம் சுகமானது

II இராஜா. அதி. 5

**பொருளடக்கம்:**

1. சீரியா இராஜாவின் படைத்தலைவனான நாகமான் குஷ்டரோகியாயிருந்தது (II இராஜா. 5:1).

2. இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறைபிடித்துக் கொண்டு வரப்பட்டு, நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த சிறு பெண்ணின் ஆலோசனை (II இராஜா. 5:2, 3).

3. சீரியாவின் இராஜா நாகமானை ஒரு நிருபத்துடன் இஸ்ரவேலின் இராஜாவிடத்துக்கு அனுப்பினதும் இஸ்ரவேல் இராஜாவின் கலக்கமும் (II இராஜா. 5: 4-7).

4. எலிசா இஸ்ரவேல் இராஜாவுக்குச் சொன்ன நம்பிக்கையின் வார்த்தைகள் (II இராஜா. 5:8).

5. எலிசா நாகமானுக்குக் கொடுத்த ஆலோசனையும நாகமானின் கோபமும் (II இராஜா. 5:9-12).

6. அவனுடைய ஊழியக்காரர் அவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர் (II இராஜா. 5:13).

7. நாகமான் சுகமானது (II இராஜா. 5:14).

8. எலிசா நாகமானின் காணிக்கையை வாங்க மறுத்தது (II இராஜா. 5:15, 16).

9. கேயாசி நாகமானைப் பின்தொடர்ந்து அவனிடமிருந்து வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டது (II இராஜா. 5:20-24).

10. கேயாசி ஒரு பொருளாசைக்காரன் மட்டுமல்ல. அவன் ஒரு பொய்யனுங்கூட ஆவான். அவன் இரண்டு முறை பொய் சொன்னான் (II இராஜா. 5:26, 27).

**போதனை:**

(i) தேவ ஊழியரால் கொடுக்கப்படும் ஆலோசனைகள் நம் விருப்பத்திற்கு மாறானவையாயிருந்தாலும் நாம் முழு இருதயத்தோடும் கீழ்ப்படிந்தால், கர்த்தர் நம்மை ஆச்சரியமான விதத்தில் ஆசீர்வதிப்பார்.

(ii) நாம் கர்த்தருடைய கண்களுக்கு ஒன்றையும் மறைக்க முடியாது. நாம் எதைச் செய்தாலும், தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும் பயந்து, உத்தமமாய் செய்ய வேண்டும்.

**மனப்பாடம்** : எபிரெயர் 4:13

--------------

## பாடம் 10
## எலிசாவின் அற்புதங்கள்

II இராஜா. 2:18-22 ; 4:1-7, 38-44 ; 6:1-20

[முந்தின இரு பாடங்களில் எலிசா செய்த அற்புதங்களை நாம் படித்தோம். இப்பாடத்திலும் எலிசா செய்த மற்ற அற்புதங்களைத் தொடர்ந்து காணலாம். ]

**பொருளடக்கம்:**

1. எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, எலிசா எரிகோவிலிருந்தபோது, அந்தப் பட்டணத்தின் மனுஷர், தண்ணீர் கெட்டதாயிருக்கிறது என முறையிட்டனர். எலிசா அத்தண்ணீரை ஆரோக்கியமாக்கினான் (II இராஜா. 2:18-22).

2. கடன்பட்டிருந்த தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு விதவை எலிசாவை நோக்கிக் கூப்பிட்.டாள் - அவளுடைய எண்ணெய் பெருகினது - அந்த எண்ணெயை விற்று கடனைத் தீர்த்துக் கொள்ளும்படி எலிசா அவளுக்கு ஆலோசனை கூறினான். (II இராஜா. 4:1-7).

3. கில்காலில் பஞ்சம் உண்டானது - சாப்பிடக்கூடாமலிருந்த கூழ் - எலிசா பானையிலிருந்த தோஷத்தை நீக்கினான் (II இராஜா. 4:38-41).

4. எலிசா வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டு நூறுபேரைப் போஷிப்பித்தான் (II இராஜா 4:42-44).

5. எலிசா யோர்தானுக்குப் போனான் - அவன் தண்ணீரில் விழுந்த கோடரியை திரும்பப் பெறச் செய்தான் (II இராஜா. 6:1-7).

6. சீரியாவின் இராஜா எலிசாவை சிறை பிடித்துக்கொண்டு போக விரும்பினான் - சீரிய இராணுவம் எலிசாவைப் பிடித்துக் கொள்ளும்படி அவன் தங்கியிருந்த தோத்தானை வளைந்து கொண்டது - எலிசா, அதிகமாய் பயந்திருந்த அவனுடைய வேலைக்காரன் அக்கினிமயமான குதிரைகளையும் இரதங்களையும் காணும்படி செய்தான் - அந்த இராணுவத்திற்கு கண்மயக்கம் உண்டாகும்படி செய்யப்பட்டு, அவர்கள் எலிசாவினால் சமாரியாவிற்கு நடத்தப்பட்டனர் (II இராஜா. 6:8-20).

**போதனை :**

எலிசா தேவனுடைய வல்லமையினால் நிரப்பப்பட்ட தேவ மனுஷனாயிருந்தபடியால், அற்புதங்களை நடப்பிக்க கூடியவனாயிருந்தான். தேவன் அவனோடுகூட இருந்தார். நாமுங்கூட தேவனுடைய வல்லமையினால் நிரப்பப்பட்டிருந்தால் தேவன் நம் மூலமாகவும் அற்புதங்களை நடப்பிப்பார்.

**மனப்பாடம்** : சங்கீதம் 33:18,19 ; 77:14

--------------

## பாடம் 11
## ஸ்தேவான்

அப். அதி. 6, 7

**பொருளடக்கம்:**

1. ஸ்தேவான் முதலாம் நூற்றாண்டில் பந்தி விசாரணைக்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட, பரிசுத்தாவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருந்த ஏழு பேரில் ஒருவன் ஆவான் (அப். 6:1-6).

2. அவன் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்து பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான் (அப். 6:8).

3. அவன் தேவதூஷணம் செய்ததாக பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, பிடிக்கப்பட்டு, ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாகக் கொண்டுபோகப்பட்டான் (அப். 6:9-15).

4. பிரதான ஆசாரியனின் விசாரணையும், ஸ்தேவான் கொடுத்த விளக்கமும் - ஆபிரகாம் முதல் இயேசுகிறிஸ்துவரையுள்ள சரித்திரத்தை அவன் வரிசையாக முழுவதும் விவரித்தான் (அப். 7:1-50).

5. வணங்காக் கழுத்துள்ளவர்களையும், இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாமல் எப்போதும் பரிசுத்தஆவிக்கு எதிர்த்து நின்றவர்களையும் அவன் கடிந்துகொண்டான். (அப். 7:51-53).

6. ஸ்தேவான் பேசியதைக் கேட்டவர்களின் மூர்க்கத்தனமான செய்கைகள் (அப். 7:54).

7. அவன் கண்ட தரிசனம் (அப். 7:55, 56).

8. ஜனங்கள் ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, கல்லெறிந்தார்கள் (அப். 7:57, 58).

9. ஸ்தேவானின் ஜெபமும் அவன் இரத்தசாட்சியாக மரித்தும் (அப். 7:59,60).

**போதனை:**

நம்மைப் பகைக்கிறவர்களுக்காகவும் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் நாம் ஜெபம்பண்ணி, இவ்விதம் தீமையை நன்மையினால் வெல்ல வேண்டும்.

**மனப்பாடம்:** I பேதுரு 4:14

--------------

## பாடம் 12
## சுவிசேஷகனாகிய பிலிப்புவின் ஊழியம்

அப். 6:3-6 ; 8:4-17, 26-40 ; 21:8, 9

**பொருளடக்கம்:**

1. ஸ்தேவானைப் போலவே, பிலிப்புவும், முதலாம் நூற்றாண்டு சபையாரால் பந்தி விசாரணைக்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட ஏழு பேரில் ஒருவனாயிருந்தான் (அப். 6:3, 5, 6).

2. அவனுடைய வீடு செசரியாவிலிருந்தது. அவனுக்கு நான்கு குமாரத்திகள் இருந்தனர் (அப். 21:8,9).

3. சபைக்கு விரோதமாக வந்த உபத்திரவத்தில் எருசலேமிலிருந்து சிதறிப்போனவர்களில் இவனும் ஒருவன் ஆவான். அவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான் (அப். 8:4, 5).

4. அதிசயங்கள் செய்யப்பட்டன, அநேகரிலிருந்த அசுத்தஆவிகள் துரத்தப்பட்டன, வியாதிஸ்தர் குணமாக்கப்பட்டனர். (அப். 8:6, 7).

5. புருஷரும் ஸ்திரீகளும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள் - மாயவித்தைக்காரனாகிய சீமோனுங்கூட விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான் (அப். 8:9-13).

6. பேதுருவும் யோவானும் அப்போஸ்தலரால் சமாரியாவுக்கு அனுப்பப்பட்டனர். அங்கு அவர்கள், ஞானஸ்நானம் பெற்றிருந்தவர்கள் பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் (அப். 8:26-38).

7. தேவதூதனும், கர்த்தருடைய ஆவியானவரும் பிலிப்புவிடம் பேசினார்கள் - எத்தியோப்பிய மந்திரியின் குணப்படுதலும் ஞானஸ்நானமும் (அப். 8:14-17).

8. கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். (அப். 8:39).

9. பின்பு அவன் ஆசோத்திலே காணப்பட்டு, ஆசோத்திலிருந்து செசரியா வரை சகல பட்டணங்களிலும் பரசங்கித்தான் (அப். 8:40).

**போதனை :**

சபைக்கு வந்த உபத்திரவங்களில் பிலிப்பு சிதறிப்போன ஒருவனாயிருந்தபோதிலும், அவன் சென்ற இடங்களிலெல்லாம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். அவன் கர்த்தருடைய ஆவியானவரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஊழியஞ்செய்தபடியால் ஒரு எத்தியோப்பிய மந்திரியையுங்கூட இப்பெரிய இரட்சிப்பிற்கு வழிநடத்தக் கூடியவனாயிருந்தான். நாமுங்கூட சுவிசேஷத்தின் ஆவியுள்ளவர்களாய் கர்த்தருக்குக் கிழ்ப்படிந்து ஊழியஞ்செய்தால் கர்த்தர் நம்மைத் தம் கரங்களில் எடுத்துப் பிரயோஜனப்படுத்துவார்.

**மனப்பாடம்:** ரோமர் 1:16, 17

-------------

## பாடம் 13
## சவுலின் குணப்படுதல்

அப். 8:1-3 ; 9:1-22 ; 22:3, 4 ; பிலி. 3:5, 6

**பொருளடக்கம்:**

1. சவுலைப் பற்றிய விவரங்கள் (அப். 22:3, 4 ; பிலி. 3:5, 6).

2. சவுலுக்குத் தன் மார்க்கத்தைக் குறித்திருந்த பக்திவைராக்கியம் - அவன் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்தினான் - அவன் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டு போய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான். அவர்களைக் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியரிடத்திலிருந்து நிருபங்களைப் பெற்றுக்கொண்டான் (அப். 8:1, 3 ; 9:1, 2 ; பிலி. 3:6).

3. அவன் கண்ட தரிசனமும் தன் பார்வையை இழந்ததும் (அப். 9:3-9).

4. தேவன் அனனியாவுக்குக் கொடுத்த வெளிப்படுத்தலும் அவன் சவுலைச் சந்தித்ததும் (அப். 9:10-17).

5. சவுல் மறுபடியும் பார்வையடைந்து, ஞானஸ்நானம் பெற்று ஊழியஞ் செய்ய ஆரம்பித்தது (அப். 9:18-22).

**போதனை:**

நாம் தேவனுடைய பிள்ளைகளைத் துக்கப்படுத்தும் போது, உண்மையில் தேவனையே துக்கப்படுத்துகிறோம். நாம் பரம தரிசனத்திற்குக் கீழ்ப்படிவோமாகில் அவர் நம்மை முற்றிலும் மாற்றி, அவருக்கேற்ற பாத்திரங்களாக்குகிறார்.

**மனப்பாடம்:** I தீமோத்தேயு 1:12, 13

---------------

### பாடம் 14

## பேதுருவால் செய்யப்பட்ட அற்புதங்கள்

அப். 3:1-10 ; 9:32-42

**பொருளடக்கம்:**

1. பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குப் போனார்கள் - பேதுரு தேவாலய வாசலண்டையிலே உட்கார்ந்திருந்த சப்பாணியைக் குணமாக்கினார் (அப். 3:1-10).

2. பேதுரு லித்தா ஊரிலே குடியிருந்த பரிசுத்தவான்களிடத்திற்குப் போனார். அங்கே எட்டு வருஷமாய் திமிர்வாதமுள்ளவனாயிருந்த ஐனேயாவை அவர் சுகமாக்கினார் (அப். 9:32-35).

3. யோப்பா பட்டணத்திலிருந்து தபீத்தாள் என்னும் சீஷி - அவள் மரித்தபோது பேதுரு அவளை உயிரோடெழுப்பினார் (அப். 9:36-42).

**போதனை:**

பேதுரு, இயேசுவின் நாமத்திலுள்ள பலத்த வல்லமையை உறுதியாக விசுவாசித்த ஒரு அப்போஸ்தலன் ஆவார். எனவே அவர் அற்புதங்களைச் செய்யக்கூடியவராயிருந்தார். அது போலவே நாமுங்கூட கர்த்தருடைய வல்லமையை விசுவாசித்தால் கர்த்தர் நம் மூலமாக அற்புதங்களைச் செய்வார்.

**மனப்பாடம்:** மத்தேயு 18:18

### பாடம் 15

## கொர்நேலியு வீட்டாரின் இரட்சிப்பு

அப். அதி. 10

**பொருளடக்கம்:**

1. கொர்நேலியுவின் குணாதிசயங்கள் (அப். 10:1, 2, 22).

2. அவன் கண்ட தரிசனமும், தேவதூதனால் கொடுக்கப்பட்ட ஆலோசனையும் (அப். 10:3-6).

3. கொர்நேலியு யோப்பா பட்டணத்திலிருந்த பேதுருவிடம் மனுஷரை அனுப்பினான் (அப். 10:7, 8).

4. பேதுரு கண்ட தரிசனம் (அப். 10:9-16).

5. கொர்நேலியுவின் தூதுவர்கள் பேதுருவின் வீட்டு வாசற்படிக்கு வந்தபோது தேவ ஆவியானவரால் பேதுருவுக்குக் கொடுக்கப்பட்ட போதனை - பேதுருவுக்கும் அம்மனிதருக்கும் இடையே நடந்த சம்பாஷணை (அப். 10:17-22).

6. பேதுரு, யோப்பா பட்டணத்தாராகிய சில சகோதரருடன் கொர்நேலியுவின் வீட்டிற்குப் போனார் - கொர்நேலியு பேதுருவை வரவேற்றான் - இருவருக்கும் இடையே நடந்த சம்பாஷணை (அப். 10:23-33).

7. பேதுருவின் பிரசங்கம் (அப். 10:34-43).

8. பேதுரு பிரசங்கம் செய்து கொண்டிருந்நபோது வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்தாவியானவர் இறங்கினார் (அப். 10:44-46).

9. பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டார் (அப். 10:47, 48).

**போதனை:**

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவரையும், எவ்வித வித்தியாசமின்றி, கர்த்தர் இரட்சிக்கிறார். கொர்நேலியுவைப் போல உண்மையும் உத்தமமுமான இருதயத்தோடு தேவனைத் தேடுகிற யாவரையும் அவர் இரட்சித்து, தம்முடைய சகல பரலோக ஆசீர்வாதங்களாலும் நிறைக்கிறார்.

**மனப்பாடம்:** I கொரிந்தியர் 12:13

---------------

**பாடம் 16**

## பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டது

அப். 12:1-23

**பொருளடக்கம்:**

1. ஏரோதுராஜா யாக்கோபைக் கொலை செய்தான். அவன் பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான் (அப். 12:1-3).

2. ஏரோதுராஜாவால் பேதுரு சிறைச்சாலையிலிடப்பட்டார் (அப். 12:4).

3. சபையாரின் ஊக்கமான ஜெபம் (அப். 12:5).

4. பேதுரு ஒரு தூதனால் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டார் (அப். 12:6-11).

5. அவர், அநேகர் கூடியிருந்து ஜெபித்துக் கொண்டிருந்த வீட்டிற்கு வந்து, கதவைத் தட்டினார் - ரோதை என்னும் பெண் அறிவித்த சந்தோஷ செய்தி (அப். 12:12-15).

6. அவர்கள் கதவைத் திறந்தபோது பேதுருவைக் கண்டு பிரமித்தார்கள் (அப். 12:16).

7. பேதுரு அவர்களுக்குத் தன் விடுதலையைக் குறித்து அறிவித்தார் (அப். 12:17).

8. சிறைச்சாலையின் காவற்காரர் கொலை செய்யப்பட வேண்டுமென்று ஏரோதினால் கட்டளையிடப்பட்டது (அப். 12:18, 19).

9. ஏரோதின் முடிவு (அப். 12:21-23).

**போதனை:**

பேதுரு, ஏரோதுராஜாவால் சிறைச்சாலையிலிடப்பட்டு சங்கிலிகளினால் கட்டப்பட்டிருக்கையில், சபையாரின் ஊக்கமான ஜெபமே அவருக்கு விடுதலையைக் கொண்டுவந்தது. அதுபோலவே நாமும் பலவிதங்களிலும் கட்டப்பட்டிருக்கிற தேவ ஜனங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்.

**மனப்பாடம்:** சங்கீதம் 34:7, 19

----------------

## பாடம் 17

## பரி. பவுலின் முதலாம் சுவிசேஷப்பிரயாணம்

(பகுதி I)

அப். 13:1-14, 42-52

**பொருளடக்கம்:**

1. சீரியா நாட்டிலுள்ள அந்தியோகியா என்னும் ஒரு பட்டணத்திலுள்ள சபையில் பர்னபாவும் சவுலும், தீர்க்கதரிசிகளாகவும் போதகர்களாகவும் இருந்தனர் (அப். 13:1).

2. பரிசுத்தாவியானவர் அவர்களை அழைத்த ஊழியத்துக்காக அவர்கள் பிரித்து விடப்பட்டனர் (அப். 13:2, 3).

3. அவர்கள் அந்தியோகியாவிலிருந்து செலூக்கியா பட்டணத்திற்கு வந்து, அங்கிருந்து கப்பல் ஏறி சீப்புரு தீவுக்குப் போனார்கள் (அப். 13:4).

4. அவர்கள் சாலமி பட்டணத்திற்குப் போய், ஜெப ஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள். அவர்களுக்கு உதவி செய்ய யோவான் இருந்தார் (அப். 13:5).

5. பாப்போ பட்டணத்தில் ஊழியம் -செர்கியுபவுல் என்னும் அதிபதி -அவன் தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தது -அதிபதியுடனிருந்த பர்யேசு (எலிமா) என்னும் பேர் கொண்ட மாயவித்தைக்காரன் அதிபதியை விசுவாசத்திலிருந்து திருப்பும்படி வகைதேடி, பவுலோடும் பர்னபாவோடும் எதிர்த்து நின்றான். பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்து அவனைக் கடிந்துகொண்டார். அவன் குருடனானான். அதிபதி விசுவாசித்தான் (அப். 13:6-12).

6. அவர்கள் பாப்போ பட்டணத்தை விட்டு பெர்கே பட்டணத்திற்கு வந்தார்கள். இங்கே யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பிப் போனார் (அப். 13:13).

7. பெர்கே பட்டணத்திலிருந்து, பிசீதியாவிலுள்ள அந்தியோகியாவுக்கு அவர்கள் வந்தனர் (அப். 13:14).

8. அந்தியோகியாவில் ஜெப ஆலயத் தலைவர்களின் வேண்டுகோளின்படி ஓய்வுநாளில் பவுல் ஜெப ஆலயத்தில் பிரசங்கம் செய்தார். அடுத்த ஓய்வுநாளில் அவ்வசனங்களைத் தங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டனர் (அப். 13:14, 42).

9. யுதரில் அநேகர் விசுவாசித்தார்கள். பவுலும் பர்னபாவும் தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொன்னார்கள் (அப். 13:43).

10. அடுத்த ஓய்வுநாளிலே கொஞ்சங்குறையப் பட்டணத்தாரனைவரும் தேவவசனத்தைக் கேட்கும்படி கூடி வந்தார்கள். யூதர்கள் பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள் (அப். 13:44, 45).

11. பவுலும் பர்னபாவும் புறஜாதியாரிடத்தில் போக வேண்டுமென்ற தங்கள் தீர்மானத்தை வெளிப்படுத்தினார்கள் (அப். 13:46, 47).

12. புறஜாதியார் சந்தோஷப்பட்டனர்; அநேகர் விசுவாசித்தார்கள் (அப். 13:48).

13. கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசங்கிக்கப்பட்டது -யூதர்கள் பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தி, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள் -பவுலும் பர்னபாவும் இக்கோனியா பட்டணத்திற்குப் போனார்கள். சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள் (அப். 13:49-52).

------------------

## பாடம் 18

## பரி. பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம்

(பகுதி II)
அப். அதி. 14

**பொருளடக்கம்:**

1. இக்கோனியா - பவுலும் பர்னபாவும் ஜெபஆலயத்தில் பிரசங்கித்தனர்; யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசித்தார்கள் (அப். 14:1).

2. விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகையுண்டாக்கினார்கள். அவர்கள் இக்கோனியாவில் அநேக நாள் சஞ்சரித்து, வசனத்தை தைரியமாய்ப் போதித்தார்கள்; அற்புத அடையாளங்கள் நடந்தன (அப். 14:2, 3).

3. பட்டணத்து ஜனங்கள் பிரிந்து, சிலர் யூதரையும் சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்து கொண்டார்கள் (அப். 14:4).

4. அப்போஸ்தலரை அவமானப்படுத்தி, கல்லெறிய வேண்டுமென்று புறஜாதியாரும் யூதரும் அவர்கள் அதிகாரிகளும் அமளி பண்ணியதை அறிந்து, அவர்கள் லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் ஓடிப்போனார்கள் (அப். 14:5, 6).

5. லீஸ்திரா -அவர்கள் சுவிசேஷம் பிரசங்கித்தனர் -ஒரு சப்பாணி சுகமாக்கப்பட்டான் - இதனால் ஜனங்கள் அவர்களைத் தேவர்கள் என்று எண்ணினர் - யூப்பித்தருடைய பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் கொண்டு வந்து ஜனங்களோடு அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான் - பவுலும் பர்னபாவும் தங்களுக்குப் பலியிடுவதைத் தடை செய்து, அவர்கள் வீணான தேவர்களை விட்டு ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று அவர்களுக்குப் பிரசங்கித்தனர் (அப். 14:7-18).

6. அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து ஜனங்களுக்குப் போதனை செய்து பவுலைக் கல்லெறிந்து, அவர் மரித்துப் போனாரென்று எண்ணி, அவரைப் பட்டணத்துக்கு வெளியே இழுத்துக் கொண்டு போனார்கள் (அப். 14:19).

7. பவுல் எழுந்து பட்டணத்திற்குள் பிரவேசித்து மறுநாளில் பர்னபாவுடன் தெர்பைக்குப் போனார் (அப். 14:20).

8. தெர்பை - அப்பட்டணத்தில் சிலகாலம் தங்கியிருந்தனர் - சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது - அவர்கள் லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் பிசீதியாவிலுள்ள அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்தனர் - சீஷருக்கு கொடுக்கப்பட்ட புத்திமதி - ஒவ்வொரு சபையிலும் மூப்பர்கள் ஏற்படுத்தப்பட்டது (அப். 14:21-23).

9. பெர்கே - அவர்கள் பிசீதியாவைக் கடந்து பம்பிலியா நாட்டிற்கு வந்து பெர்கே ஊரில் தேவவசனத்தைப் பிரசங்கித்து, அத்தலியா பட்டணத்திற்குப் போனார்கள் (அப். 14:24, 25).

10. அத்தலியாவிலிருந்து அவர்கள் கப்பல் ஏறி சீரியாவிலுள்ள அந்தியோகியாவிற்கு வந்தனர்; அங்கே, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்து, அநேக நாள் சஞ்சரித்தார்கள் (அப். 14:26-28).

**போதனை:**

பவுல் தன் ஜீவனையும் அருமையாக எண்ணாமல் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றுவதில் வைராக்கியமுள்ளவராயிருந்ததுபோல, நாமுங்கூட கர்த்தருக்கென்று வைராக்கியமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** மத்தேயு 5:10-12

------------------------

## பாடம் 19

## பவுலும் சீலாவும் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டது

அப். 15:40 ; 16:12, 16-40

**பொருளடக்கம்:**

1. பவுலும் சீலாவும் தங்கள் சுவிசேஷப் பிரயாணத்தில் பிலிப்பி பட்டணத்திற்கு வந்தனர் (அப். 15:40 ; 16:12).

2. குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் - பவுல் அவளிடமிருந்து அந்த ஆவியைத் துரத்தினது (அப். 16:16-18).

3. பவுலும் சீலாவும் அவளுடைய எஜமான்களால் பிடிக்கப்பட்டு அதிகாரிகளிடத்தில் கொண்டுபோகப்பட்டனர் - அதிகாரிகள் அவர்கள அடிக்கப்படும்படி கட்டளையிட்டனர் - அவர்களை அடித்த பின்பு அவர்களை உட்காவலறையிலே அடைத்து அவர்கள் கால்களைத் தொழுமரத்திலே மாட்டி வைத்தனர் (அப். 16:19-24).

4. நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபித்து, தேவனைத் துதித்துப் பாடினார்கள் (அப். 16:25).

5. திடீரென்று ஏற்பட்ட பூமியதிர்ச்சியும், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும் (அப். 16:26).

6. சிறைச்சாலைக்காரன் தன்னைக் கொலை செய்து கொள்ளப்போனதும், பவுல் அவனைத் தடை செய்ததும் (அப். 16:27, 28).

7. சிறைச்சாலைக்காரனும், அவன் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 16:29-34).

8. பவுலும் சீலாவும் விடுதலையாக்கப்பட்டது (அப். 16:35-40).

**போதனை:**

கிறிஸ்துவின் நாமத்திற்காக நாம் சந்தோஷமாகப் பாடுகள் சகித்தால், நம்மை விடுதலையாக்கும்படியாகவும், மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக நம்மை உபயோகிக்கும்படியாகவும் தேவன் தம் சொந்த ஏதுக்களை உண்டாக்குவார்.

**மனப்பாடம்:** ரோமர் 8:17, 18

------------------------

### பாடம் 20

## ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்

அப். 18:1-3, 18-26 ; ரோமர் 16:3-5 ; I கொரி. 16:19

**பொருளடக்கம்:**

1. ஆக்கில்லா ஒரு யூதனாயிருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் பிரிஸ்கில்லாள். அவர்கள் கொரிந்துவில் வசித்து வந்தனர் (அப். 18:1, 2).

2. அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தனர். பவுல் கொரிந்து பட்டணத்தில் அவர்களுடன் தங்கினார் (அப். 18:3).

3. அவர்கள் எபேசு பட்டணத்திற்கு அவருடன் போனார்கள் (அப். 18:18, 19).

4. அப்பொல்லோ என்னும் பேர் கொண்ட யூதன்-அவனுடைய தன்மைகள் (அப். 18:24, 25).

5. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ஜெப ஆலயத்தில் அவன் தைரியமாய்ப் பேசுவதைக் கேட்டபோது, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப். 18:26).

இது, அவர்கள் வேதவாக்கியங்களிலும் அப்போஸ்தலருடைய உபதேசங்களிலும் தேறினவர்களாயிருந்தனர் என்பதைக் காட்டுகிறது.

6. பவுல் அவர்களைக் கிறிஸ்து இயேசுவுக்குள் உடன் வேலையாட்கள் என அழைக்கிறார், தன் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுக்க அவர்களை ஏவின அன்பைப் பாராட்டுகிறார் (ரோமர் 16:3, 4).

பவுலும், புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் அவர்களுக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருந்தனர் (ரோமர் 16:4).

அவர்கள் பரிசுத்தவான்கள் கூடி வருவதற்காக தங்கள் வீட்டை உபயோகிக்கும்படி கொடுத்து, ஊழியத்திற்கு உதவி செய்தனர் (I கொரி. 16:19 ; ரோமர் 16:5).

அவர்கள் தேவ அன்போடும் வைராக்கியத்தோடும் ஜீவித்தார்கள் என்பதை இவற்றின் மூலம் நாம் அறியலாம்.

**போதனை:**

ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும்போல நாமுங்கூட கர்த்தரை நேசித்து, அவருடைய ஊழியத்தின் முன்னேற்றத்திற்காகப் பிரயாசப்பட வேண்டும். நாம் அப்போஸ்தல உபதேசங்களில் தேறினவர்களாயிருந்து மற்றவர்களுக்கும் அதைப் போதிக்க வேண்டும்.

**மனப்பாடம்:** I தெசலோனிக்கேயர் 2:8 ;
II தீமோத்தேயு 3:16, 17

-----------------